D. Karthic PG Assistant

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2023

Reg.No.

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 3.00 மணி | பகுதி - I | மதிப்பெண்கள்: 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15 x 1 = 15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

2. காலம் கரந்த பெயரெச்சம் என்பது
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை

3. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு' - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

4. கருப்பொருளுக்கேற்ற உயிர்ப்பொருளைப் பொருத்துக.
அ) குறிஞ்சி - 1. உப்பு விளைத்தல்
ஆ) முல்லை - 2. நெல்லரிதல்
இ) மருதம் - 3. நிரை மேய்த்தல்
ஈ) நெய்தல் - 4. தேனெடுத்தல்
அ) அ - 4, ஆ - 3, இ - 2, ஈ - 1 ஆ) அ - 3, ஆ - 2, இ - 4, ஈ - 1
இ) அ - 1, ஆ - 3, இ - 2, ஈ - 4 ஈ) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 3

5. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கும்?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

6. குமரிமாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்
அ) ம.பொ.சி ஆ) ஜெயகாந்தன்
இ) மார்ஷல் எ.நேசமணி ஈ) பெரியார்

7. இவள் தலையில் எழுதியதோ கற்காலம் எப்போதும் - இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

8. கருணையன் என்பர்
அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு இ) அருளப்பன் ஈ) சந்தாசாகிப்

9. உடன்பட்டுக் கூறும் விடை
அ) சுட்டு விடை ஆ) மறை விடை இ) நேர் விடை ஈ) ஏவல் விடை

10. எய்துவர் எய்தாப்பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

11. ஆண்பாற், பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பொதுவான பருவங்கள்
அ) 4 ஆ) 7 இ) 6 ஈ) 3

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக :

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

12. இப்பாடல் இடம்பெற்ற நூல்
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

13. நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்
அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்
இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

14. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்
அ) பெரும்பெயல் பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்
இ) பாடுஇமிழ் கோடுகொண்டு ஈ) நீர் செல், நிமிர்ந்த

15. பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை
அ) தடக்கை ஆ) வளைஇ இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

## பகுதி - II

### பிரிவு - அ

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4 x 2 = 8**
**(வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக்கேட்டு முழுது உணர்ந்து கபிலன்
தன்பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப்
புலவன் தென்சொல்" - இவ்வடிகளில்
கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

17. **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க :**
அ) செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
ஆ) சாலைகளின் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி.

18. "சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

19. குறிப்பு வரைக : அவையம்

20. 'கரப்பிடும்பை இல்லார்' - இத்தொடரின் பொருளை வள்ளுவர் வழி நின்று கூறுக.

21. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதி, தொடர்களில் அமைக்க.

23. ***பொருத்தமானவற்றைச் சொற்பட்டியல் கண்டு எழுதுக.***
கவிழும், அவிழும், தயங்கும், தங்கும்
அ) காலை ஒளியினில் மலரிதழ் -
ஆ) சோலைப் பூவினம் வண்டினம் -
இ) மலைமுகட்டில் மேகம் -
ஈ) அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் -

24. ***மரபுத்தொடரின் பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.***
அ) கண்ணும் கருத்தும் ஆ) கயிறு திரித்தல்

25. ***கலைச்சொல் தருக***
அ) Epic Literature ஆ) Space Technology

26. ஒரு நாட்காட்டியில் ஞாயிற்றுக்கிழமை இருபதாம் நாள் எனில் அந்த வாரத்தில் புதன் கிழமையும், சனிக்கிழமையும் எந்த நாள்களில் வரும் என்பதனை தமிழ்எண்களில் எழுதுக.
ஞாயிற்றுக் கிழமை - 20 (உ0)
புதன் கிழமை -
சனிக்கிழமை -

**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**
*எதிர் மறையான சொற்களை எழுதுக :* அ) மீளாத் துயர் ஆ) புயலுக்குப் பின்

27. 'மயங்கிய' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. ஊர்ப் பெயர்களின் மரூஉ வை எழுதுக.
அ) நாகப்பட்டினம் ஆ) புதுக்கோட்டை

## பகுதி - III

### பிரிவு - அ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. காலமாற்றம் தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

30. ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.***

அம்மானை பாடல்கள், சித்தர்பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன். யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே அதிகம் உண்டு என்றெல்லாம் செவிச்செல்வம் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார்.

அ) ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்?

ஆ) ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?

இ) ஏட்டுக் கல்வி பெறாத ம.பொ.சி அதனை எவ்வாறு ஈடு செய்தார்?

32. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

## பிரிவு - ஆ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

***(34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)***

32. மன்னர் இடைக்காடனார் புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

33. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது? என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.

பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்தால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

34. அடிபிறழாமல் எழுதுக :

அ) "புண்ணிய புலவீர் யான்" .... எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடல்

***(அல்லது)***

"தென்னன் மகளே" .... எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடல்.

## பிரிவு - இ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. 'கண்ணே கண்ணுறங்கு !
காலையில் நீயெழும்பு !
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு !
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு !

- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்பவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை விளக்குக.

37. "வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு" - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5 x 5 = 25**

38. அ) 'பொருள்செயல்வகை' குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்கள் எழுதுக.

***(அல்லது)***

ஆ) 'முதல் மழை விழுந்ததும்' - தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை "ஏர் புதிதா?" கவிதை கொண்டு விவரித்து எழுதி, 'பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டினை மகுடம்' என்பதையும் விளக்குக.

39. அ) புதியதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு திறன்பேசிப் பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக.

***(அல்லது)***

ஆ) பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்காகப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :



41. எழுத்தர் பணியினை வேண்டி வேலைவாய்ப்பிற்காக கொடுக்கப்பட்டதன் விவரப் பட்டியலை பூர்த்தி செய்க.

42. அ) பள்ளியில் நான், வீட்டில்நான் - என்னும் தலைப்புகளில் நீங்கள், பள்ளியிலும் வீட்டிலும் நடந்து கொள்ளும் முறைகள் ஐந்தினைக் குறிப்பிடுக. *(அல்லது)*

ஆ) மொழிபெயர்க்க:

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா:**

கிபி (பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப்பெயர் பூண்டு சீனாவுக்குச் சென்றார். பௌத்த சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்தார். அதிலிருந்து உருவானதே "ஜென்" தத்துவம். இது, பின்னர் ஜப்பான் முதலிய நாடுகளுக்குப் பரவிச் செழித்து விளங்கியது. போதி தருமருக்குச் சீனர்கள் கோவில் கட்டி சிலை வைத்து இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

1. காஞ்சி மாநகர சிற்றரசரின் சமயப் பெயர் என்ன?
2. பௌத்த சமயத்தின் பிரிவு எது?
3. போதிதருமருக்கு கோவில் கட்டி சிலை வைத்த நாடு எது?
4. போதிதருமர் சீனாவிற்கு எப்போது சென்றார்?
5. இவ்வுரைப் பத்திக்கு ஏற்ற தலைப்பு ஒன்று தருக.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3 x 8 = 24**

43. அ) மூன்று நிகழ்கால கலைஞர்களை நேர்முகம் கண்டு அவர்களது கருத்துகளையும் அவர்களது மறு வாழ்விற்கான வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றையும் குறிப்பிட்டு எழுதுக. *(அல்லது)*

ஆ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

44. அ)

| மகளிர் நாள் விழா |
|---|
| இடம் : பள்ளிக் கலையரங்கம் நாள் : 08.03.2019 |
| கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமை ஆசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை. |

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. *(அல்லது)*

ஆ) 'அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் ஒரு விண்வெளிப் பயணம்' என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றை எழுதுக.

45. அ) *குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று எழுதுக :*

முன்னுரை - தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - பொது வாழ்வியல் தூய்மை - எளிமை - மக்கள் பணியே மகத்தான பணி - முடிவுரை.

*(அல்லது)*

ஆ) "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக.

******